RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 114 மே.1 2026 வெள்ளிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# “தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக திமுக என்றென்றும் திகழ்ந்திடும்” : முதல்வர் ஸ்டாலின்

சென்னை: மே.1-

“உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில், திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழ்ந்திடும்,” என்ற உறுதியை அளிக்கிறேன் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “உழைப்பு என்பது மனித இனத்தின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, அதன் அரசியல், சமூகப் பரிணாமத்திற்கும் அடிப்படைக் காரணியாக இருக்கும் உந்து சக்தியாகும். உலகினை உழைப்பால் செலுத்தும், உலகினுக்குத் தங்கள் வியர்வையால் உயிரூட்டும் பாட்டாளி வர்க்கத்தினருக்கு எனது உழைப்பாளர் நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்காக மே நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை, சென்னையில் மே தினப் பூங்கா, தொழிலாளர் நல வாரியம் என எண்ணற்ற பங்களிப்புகளைக் கழக ஆட்சிதோறும் செய்து வந்திருக்கிறோம்.

‘பெரியாரையும், அண்ணாவையும் சந்தித்திருக்காவிட்டால் நானும் கம்யூனிஸ்டாகத்தான் ஆகி இருப்பேன்’ என்று சொன்னவர் கருணாநிதி. அவர் தலைமையில் ஆட்சி அமைந்த போதெல்லாம் தொழிலாளர் நலம் காக்க எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றியது வரலாற்றின் பக்கங்களில் பொன்னெழுத்துகளாக மின்னிக் கொண்டிருக்கிறது.

அந்த வழித்தடத்தில்தான் திராவிட மாடல் அரசிலும், இந்தியாவுக்கே வழிகாட்டும் பல தொழிலாளர் நலத்திட்டங்களைச்



செயல்படுத்தியுள்ளோம். கழனியிலும் தொழிற்சாலைகளிலும் பாடுபடும் உழைப்பாளத் தோழர்களின் நலன்களைப் பாதுகாப்பது போலவே, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள பெண்கள் மற்றும் திருநங்கைகள் புதிய ஆட்டோ ரிக்சா வாங்க மானியம், பதிவுபெற்ற அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி, அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன்களையும் பாதுகாக்கிறோம்.

அதோடு, இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடவும் நலவாரியம் உருவாக்கப்பட்டு, அதில் பதிவு செய்த தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் புதியதாக e-Scooter வாங்க மானியம் வழங்கும் புதிய திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதுமட்டுமின்றி, அவர்கள் பணிகளுக்கிடையே ஓய்வு எடுக்கும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி சாதனைகள் பல படைத்தும், பாட்டாளி மக்களின் உயர்வுக்கு நாம் கொண்டுள்ள உறுதியை வெளிப்படுத்தும் விதமாகவும், “உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், நீங்கள் இழப்பதற்குக் கை விலங்குகளைத் தவிர எதுவுமில்லை” என அழைத்த உலக மாமேதை கார்ல் மார்க்ஸுக்கு சென்னையில் சிலை அமைத்துள்ளோம். இப்படி, சொல்லாலும் - செயலாலும் - வரலாற்றுச் சின்னங்களாலும் உழைப்பாளர்களையும் உழைப்பையும் போற்றுகிறோம்.

உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில், திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழ்ந்திடும் என்ற உறுதியையும், உழைக்கும் தோழர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும் உளமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஆதார், பான் எண்ணைத் திருடி நூதன மோசடி: ரூ.4.70 கோடி ஜிஎஸ்டி செலுத்துமாறு ஓட்டுநருக்கு நோட்டீஸ்

### காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார்

சென்னை: மே.1-

ஜிஎஸ்டி ரூ.4.70 கோடி செலுத்த வேண்டும் என்று நோட்டீஸ் வந்ததால் கார் ஓட்டுநர் அதிர்ச்சி அடைந்தார். வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் கார் ஓட்டுநர் கமலநாதன் (36). கடந்த 10 ஆண்டுகளாக திருவேற்காடு அடுத்த புளியம்பேடு நூம்பல் பகுதியில் மனைவி, 2 குழந்தைகளுடன் வசித்து வருகிறார். இந்நிலையில், வேலூரில் உள்ள அவரது சொந்த வீட்டு முகவரிக்கு கடந்த பிப்ரவரி மாதம் ஜிஎஸ்டி அலுவலகத்தில் இருந்து ஒரு கடிதம் வந்துள்ளது.

அதில், ‘கமலநாதன் ரூ.4.70 கோடி ஜிஎஸ்டி வரி செலுத்த வேண்டும்’ என குறிப்பிடப்பட்டிருந்தது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவர் உடனடியாக ஜிஎஸ்டி அலுவலகத்தை அணுகி விளக்கம் கேட்டுள்ளார்.

அடையாளம் தெரியாத நபர்ஒருவர் கமலநாதனின் ஆதார், பான் அட்டை விவரங்களை பயன்படுத்தி அவரது பெயரில் ஜிஎஸ்டி பதிவு செய்து, ஓசூர், திருப்பூரில் நிறுவனம் தொடங்கி தொழில் செய்து வந்துள்ளார்.

திருப்பூரில் கமல் என்டர்பிரைஸ் என்ற பெயரில் ஏற்றுமதி இறக்குமதி நிறுவனம் நடத்தி வந்ததாகவும், பின்னர் அதை நிறுத்திவிட்டதும் தெரியவந்தது.

இதையடுத்து, ஜிஎஸ்டி அலுவலக அதிகாரிகள் மற்றும் அதைத் தொடர்ந்து, வானகரம் போலீஸார் அறிவுறுத்தியபடி, சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் கமலநாதன் நேற்று புகார் கொடுத்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியபோது, “ரூ.4.70 கோடி ஜிஎஸ்டி வரி கட்ட வேண்டும் என்று எனக்கு நோட்டீஸ் வந்துள்ளது.

எனது ஆதார், பான் விவரங்களைத் திருடி மோசடியில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.

## புதுச்சேரி சிறுமி கொலை வழக்கு: கருணாஸ் குற்றவாளி என தீர்ப்பு; மே 5ல் தண்டனை விவரம் அறிவிப்பு

புதுச்சேரி: மே.1-

புதுச்சேரியை உலுக்கிய சிறுமி கொலை வழக்கில் கருணாஸ் குற்றவாளி என போக்சோ நீதிமன்றம் இன்று அறிவித்தது. வரும் மே 5ம் தேதி தண்டனை அறிவிக்கப்படுகிறது.

முத்தியால்பேட்டை சோலை நகரைச் சேர்ந்த 5ம் வகுப்பு படித்த 9 வயது சிறுமி கடந்த 2024 மார்ச் 2ம் தேதி வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்தபோது திடீரென மாயமானார். 2 நாட்களுக்குப்பின் அருகே உள்ள வாய்க்காலில் கை, கால்கள் கட்டப்பட்டு போர்வையால் சுற்றப்பட்ட நிலையில், பிணமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் புதுச்சேரியை உலுக்கியது. முத்தியால்பேட்டை போலீஸார் வழக்கு பதிவு செய்து, அதே பகுதியைச் சேர்ந்த கருணாஸ் (19), விவேகானந்தன் (59) ஆகியோரை போக்சோ வழக்கில் கைது செய்தனர். இவ்வழக்கு தொடர்பாக 540 பக்க குற்றப்பத்திரிகையை போலீஸார் தாக்கல் செய்தனர்.

இதில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த விவேகானந்தன் கடந்த 2024 செப்டம்பரில் கழிவறையில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். தொடர்ந்து வழக்கு போக்சோ விரைவு நீதிமன்றத்தில் நீதிபதி சுமதி முன்பாக நடந்தது. விசாரணை முடிந்த நிலையில் இன்று இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நீதிபதி சுமதி, குற்றம் சாட்டப்பட்ட கருணாஸை குற்றவாளி என அறிவித்தார். வரும் மே 5ம் தேதி இரு தரப்பு வாதத்துக்கு பிறகு தண்டனை விவரத்தை அறிவிப்பதாக தெரிவித்தார்.

இவ்வழக்குதொடர்பாக அரசு தரப்பு வழக்கறிஞர் பச்சையப்பன் கூறியதாவது: பாலியல் நோக்கில் குழந்தை கடத்தல், குழந்தையை அடைத்து வைத்தல், கொலை செய்தல் ஆகிய பிரிவுகளிலும் தடயம் ஆதாரம் மறைத்து வைத்தல் மற்றும் போக்சோ சட்டம் 6ன் கீழ் கருணாஸ் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வழக்கில் மரணத்தண்டனைக்கான குற்றங்களுக்கான பிரிவுகள் இருக்கிறது. அரிதினும் அரிதான வழக்கு என உச்சநீதிமன்ற வழிகாட்டுதல் படி அரசு தரப்பு, எதிர்தரப்பு விவாதங்களுக்கு பிறகு தண்டனை விவரம் தெரிவிப்பார்கள்.

அரசு தரப்பில் குற்றவாளிக்கு மரணதண்டனைதான் தீர்வு என வாதங்கள் வைத்துள்ளோம். வாதங்கள் கடந்த 15 முதல் 17 வரை நடந்தது. எழுத்துப்பூர்வ வாதங்களையும் எடுத்து வைத்துள்ளோம்.

இவ்வழக்கில் புதுச்சேரி வழக்கறிஞர்கள் எதிர்தரப்புக்கு ஆஜராகவில்லை. இலவச சட்ட உதவி மையம் மூலம் விழுப்புரம் வழக்கறிஞர் குற்றம் சாட்டப்பட்டோர் தரப்புக்காக நீதிமன்றம் நியமித்தது. அரசு தரப்பு சாட்சியங்கள் 54 பேரை விசாரித்தோம். 80 ஆவணங்கள், பாதிக்கப்பட்ட சிறுமி செருப்பு, ஆடை, முடி, கைப்பற்றப்பட்ட உயிரி மாதிரிங்கள் சான்று பொருட்களாக சமர்பித்தோம்.

கடந்த 2024 நவம்பரில் சாட்சி விசாரணை தொடங்கியது. இவ்வழக்கில் 54 சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டன.குற்றம் சாட்டப்பட்ட விவேகானந்தன் தற்கொலை செய்ததால் அவர் மீது இவ்வழக்கில் இருந்த எஸ்சிஎஸ்டி வன்கொடுமை தடுப்பு சட்டப்பிரிவுகள் எடுக்கப்பட்டன. மேலும் குற்றம் சாட்டப்பட்டோர் செல்போனில் ஆபாச வீடியோக்கள், உயிர் மாதிரிகள் கிடைத்தன.

முக்கிய வழக்குகளில் பாலியல் குற்றங்கள் மற்றும் போக்சோ வழக்குகளில் கூட்டு பாலியல் வன்கொடுமை, குழந்தை இறப்பு , குழந்தை 12 வயதுக்கு கீழ் இருப்பது ஆகிய மூன்று குற்றங்கள் அடிப்படையில் இவ் வழக்கு இருக்கிறது. அதனால் தண்டனையை உடன் அறிவிக்க இயலாது.

வழக்குகளில் குற்றவாளி தீர்ப்பு வந்த பிறகு என வந்த பிறகு தண்டனை குறைக்க குற்றவாளி தரப்பும், அதிகபட்ச தண்டனை தர அரசு தரப்பும் வாதம் செய்யவுள்ளனர். அதன்பிறகுதான் தண்டனை விவரம் அறிவிக்கப்படும்" என்றார். இவ்வழக்கு விசாரணை பார்ப்பதற்காக சிறுமி பெற்றோர், உறவினர்கள் நீதிமன்றம் வந்திருந்தனர்.

## தமிழக வாக்கு எண்ணிக்கையை பார்வையிட மே 2ல் தேர்தல் பார்வையாளர்கள் வருகை

சென்னை: மே.1-

தமிழகம் முழுவதும் 62 மையங்களில் மே 4ம் தேதி நடைபெறும் வாக்கு எண்ணிக்கையை மேற்பார்வையிட தேர்தல் பார்வையாளர்கள் மே 2ம் தேதி தமிழகம் வருகின்றனர்.




தமிழகத்தில் உள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் கடந்த ஏப்.23ம் தேதி தேர்தல் நடைபெற்றது. எவ்வித அசம்பாவிதம், மறு வாக்குப்பதிவும் இன்றி நடைபெற்று முடிந்த இந்த தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத அளவு 85.10 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளன.

75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் இருந்து பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு இயந்திரங்கள், விவிபாட் மற்றும் கட்டுப்பாட்டு இயந்திரங்கள், அந்தந்த தொகுதிகள் அடங்கிய வாக்கு எண்ணும் மையங்களில் உள்ள ‘ஸ்டிராங்’ அறைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஸ்டிராங் அறைகளுக்கு 4 அடுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதுடன், சிசிடிவி கேமரா மூலமும் கண்காணிக்கப்படுகிறது. தேர்தல் பாதுகாப்புப் பணிக்கு வந்த துணை ராணுவப் படையினரில் ஒரு பிரிவினர் அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதுதவிர வாக்கு எண்ணிக்கை பாதுகாப்புக்காக 18 ஆயிரம் போலீஸார் பணிய மர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் வரும் மே 4ம் தேதி 62 மையங்களிலும் காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது.

முதலில் தபால் வாக்கு எண்ணிக்கை தொடங்கப்படும். அதன் பின் மின்னணு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாதுகாப்பு ஆலோசனை

இந்நிலையில், தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை பாதுகாப்பு தொடர்பாக, நேற்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலர் எஸ்.சாய்குமார் தலைமையில் ஆலோசனை நடைபெற்றது.

இதில் டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர், சென்னை காவல் ஆணையர் அபின் தினேஷ் மோடக், ஆவடி காவல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்கா, தாம்பரம் காவல் ஆணையர் சஞ்சய்குமார் உள்ளிட்ட காவல் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதில், வாக்கு எண்ணிக்கை முடியும் வரை தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, வாக்கு எண்ணிக்கை நாளில் பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது.

### பார்வையாளர்கள் வருகை

சட்டப்பேரவைத் தேர்தலின் போது, ஏற்கெனவே சிறப்பு தேர்தல் பார்வையாளர் மற்றும் தொகுதிக்கு ஒரு தேர்தல் பார்வையாளர், காவல் துறை பார்வையாளர் மற்றும் செலவினப் பார்வையாளர்கள் என வெளி மாநில அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் தேர்தல் பார்வையாளர்கள் வாக்கு எண்ணிக்கையை மேற்பார்வையிட வரும் மே 2ம் தேதி தமிழகம் வருகின்றனர். 62 மையங்களிலும் பணியாற்றும் வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கான தேர்வு அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் முன்னிலையில் ஏற்கெனவே நடைபெற்று முடிந்துள்ளது.

இந்நிலையில், நேற்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தலைமையில், சென்னையில் 234 தொகுதிகளுக்குமான வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

சென்னை மாநிலக் கல்லூரி அரங்கில் நடைபெற்ற இதில், தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் உட்பட 3 பேர் என 234 தொகுதிகளுக்கும் சேர்த்து ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

புதுச்சேரி தேர்தல் அலுவலர் ஞானவேல் அனைவருக்கும் பயிற்சி அளித்தார். இதில் வாக்கு எண்ணிக்கை நடத்துவது, சுற்றுவாரியாக முடிவுகளை வெளியிடுவது, ஆவணங்களை பாதுகாப்பது உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கும் வாக்கு எண்ணிக்கை தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கினார். இதில், கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி சிவஞானம், இணை தலைமைத் தேர்தல் அதிகாரி ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி வே.ஸ்ரீதர், இணை தலைமைத் தேர்தல் அதிகாரி ஆர்.மேனுவல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சென்னை துறைமுகம் தவெக வேட்பாளருக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது: ஐகோர்ட்டில் காவல்துறை தகவல்

சென்னை: மே.1-

அமைச்சர் சேகர்பாபு கொலை மிரட்டல் தொடர்பாக துறைமுகம் தொகுதி தவெக வேட்பாளர் சினோரா அசோக்கிற்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக காவல்துறை சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.



சென்னை துறைமுகம் தொகுதி தவெக வேட்பாளர் சினோரா அசோக் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தல் வழக்கில், அதில், வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 23ம் தேதி அமைச்சர் சேகர்பாபு தனது அடியாட்களுடன் தன்னைத் தாக்கினார்கள் என்றும் மேலும் வாக்கு எண்ணிக்கை நாளில் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

தனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாகவும், தோல்வி பயத்தில் வாக்கு எண்ணிக்கை நாள் அன்று தன்னை தாக்க திட்டமிட்டுவதாக தெரிவித்துள்ளார். இது குறித்து காவல் துறை ஆணையரிடம் புகார் அளித்துள்ளதாகவும் ஆனால் ஒரே காவலர் மட்டும் பாதுகாப்பு வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சேகர்பாபுவால் மிகப்பெரிய அச்சுறுத்தல் உள்ளதால் வீட்டிற்கு நிரந்தர பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி எம். நிர்மல் குமார் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது காவல்துறை தரப்பில் சினோரா அசோக்கிற்கு போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டுள்ளார்.

# நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள வெலிங்டன் ராணுவ முகாம் சார்பில் மாரத்தான் போட்டி நடைபெற்றது




குன்னூர் மே.01-

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள வெலிங்டன் ராணுவ முகாமில் படைப்பிரிவு ராணுவ அதிகாரிக் களுக்கான 36வது கருத்தரங்கு நேற்று நடந்தது. இதனை முன்னிட்டு முன்னதாக ராணுவ பயிற்சி கல்லூரி அருகே உள்ள உலகப்போர் நினைவுத்தூணில் போரில் உயிர் நீத்த ராணுவ வீரர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தென்மேற்கு படைப்பிரிவின் தளபதியும்,படைபிரிவின் கர்ணலுமான லெப்டினன்ட் ஜெனரல் மஞ்சிந்தர் சிங் மற்றும் எம் ஆர் சி கமாண்டன்ட் கிருஷ் நேந்து தாஸ், தலைமையில் முப்படை மற்றும் ராணுவ வீரர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். இதனைத் தொடர்ந்து நேற்று காலை மெட்ராஸ் ரெஜிமென்ட் சென்டர் சார்பில் தங்கராஜ் ஸ்டேடியத்தில் மாரத்தான் போட்டி நடந்தது.இதனை வெலிங்டன் ராணுவ முகாம் கமாண்டர் பிரிகேடியர் கிருஷ் நேந்து தாஸ் கொடி அசைத்து துவக்கி வைத்தார் போட்டியில் ராணுவ வீரர்கள் 118 பேர் 17 குழுக்களாக பிரிந்து 10 கிலோ மீட்டர் தூரம் மராத்தான் போட்டியில் பங்கேற்றனர். போட்டியில் 10 மெட்ராஸ் அணி முதலிடத்தையும், 18 மெட்ராஸ் அணி இரண்டாம் இடத்தையும் பிடித்தது. வெற்றி பெற்ற அணிகளுக்கு தென்மேற்கு படைப்பிரிவின் தளபதியும்,படைப்பிரிவின் கர்ணலுமான லெப்டினென்ட் ஜெனரல் மஞ்சிந்தர் சிங் சுழற் கோப்பைகள் மற்றும் பதக்கங்களை வழங்கி கௌரவப் படுத்தினார்.

# ஆசைகாட்டி பாலியல் வன்கொடு மை செய்த 3 பேர் போக்சோவில் கைது.வந்தவாசி போலீசார் நடவடிக்கை





வந்தவாசி,மே.01-

வந்தவாசி அருகே சிறுமியை ஆசைகாட்டி பாலியல் வன்கொடுமை செய்த 3 பேரைபோலீசார் போக்சோவில் கைது செய்தனர் திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த கிராமத்தை சேர்ந்தவர் 16 வயது சிறுமி. வீட்டில் தனியாக இருந்த அந்த சிறுமியிடம்ஆசை வார்த்தை கூறி ஒருவருக்கு தெரியாமல் இன்னொருவர் என 3 பேர் பாலியல் தொடர்பில் இருந்துள்ளனர். இந்த தொடர்பினால் சிறுமி5 மாத கர்ப்பமானார். இதைத் தொடர்ந்து அந்த சிறுமி திருவண்ணாமலை மாவட்டதலைமை மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனைதொடர்ந்து வந்தவாசி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் விசாரணை செய்ததில் எறும்பூர்ஆதிதிராவிடர் பகுதியை சேர்ந்த தனியார் நிறுவன தொழிலாளி முத்தையா என்பவரதுமகன் முத்துக்குமார் என்கின்ற ஆகாஷ் (வயது 19),தினக்கூலிக ளான மண்ணாங்கட்டி மகன் மூர்த்தி (வயது 35) மற்றும் மணி மகன் இளையராஜா (வயது 33) ஆகியோருக்கு தொடர்பிருப்பதைஉறுதிசெய்த அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் அவர்களை கைது செய்து நீதிபதி முன் நிறுத்தி சிறையில் அடைத்தனர்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 நடைபெற்றதையடுத்து, கிருஷ்ணகிரி அரசு பல்தொழில்நுட்ப கல்லூரியில், கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கு அமைக்கப்பட்டுள்ள வேட்பாளர்களின் முகவர்களுக்கான கண்காணிப்பு அறையை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



■ தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி நடுப்பட்டி பகுதியில் சிவியர் உறவின்முறைக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு தங்க முத்து மாரியம்மன் திருக்கோவிலின் இரண்டாவது நாள் திருவிழா இன்று அக்கினி சட்டி பால்குடம், ஒயிலாட்டம் சிறுவர்களுக்கான மாறு வேடம் அணிந்து சிறப்பாக ஆடி வந்தனர்.. இந்த கோவில் திருவிழாவில்சமுதாயப் பெரியோர்களும் ஆன்மீக பக்தர்களும் தாய்மார்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்... நிர்வாக கமிட்டி தலைவர் கோபால் துணைத் தலைவர் பால்பாண்டியன் மற்றும் ரைஸ் மில் முருகன் உட்பட சமுதாயப் பெரியவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்...



■ நீலகிரி மாவட்டம் உதகை தொட்டபெட்டா சுற்றுலா பகுதியில் கார் பார்க்கிங் அருகே உள்ள கழிப்பிடத்தில் தண்ணீர் வராததால் இந்த பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பாதிப்பு.சம்மந்தப்பட்டதுறை மற்றும் சுற்றுலாத்துறை உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை சரிசெய்ய சமூக ஆர்வலர்கள் கோரிக்கை



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னனு வாக்கு பதிவு இயந்திரங்கள், கிருஷ்ணகிரி அரசு பல்தொழில்நுட்ப கல்லுபிரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளதையடுத்து பாதுகாப்பு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



# ஸ்ரீதேவிபூதேவி சமேத வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் விழா

மாதவரம், மே.1-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி அத்திவாக்கம் கோட்டூர் கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ தேவி பூதேவி சமேத வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் ஜீர்ணோத்தாரன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் விக்னேஷ்வரபூஜை, கணபதி ஹோமம், நவக்கிரகம் ஹோமம், லட்சுமி ஹோமம், வேதபாராயணம், யாகசாலை பூஜை, நாடிசந்தானம், வாஸ்துசாந்தி, பூர்ணாஹீதி, பிரவேசபலி, அங்குரார்ப்பணம், கும்பஅலங்காரம் போன்ற பல்வேறு சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் நடைபெற்றது. பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று ஆலய விமானம் மற்றும் மூலவர் உட்பட பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் விழா நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து பக்தர்கள் மீது புனிதநீர் தெளித்தனர். இத்திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், ஆன்மீக சிந்தனையாளர்கள் ,பல்வேறு அரசியல் பிரமுகர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.




■ திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி வளாகத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில், 4 சட்டமன்ற தொகுதிகளின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளை (VVPATS) பாதுகாப்புடன் இருப்பறையில் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி.இ.ஆ.ப., (29.04.2026) அன்று பார்வையிட்டார். உடன் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் விஜயகுமாரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஜெய்சங்கர், வாக்கு எண்ணும் மையத்தின் கண்காணிப்பாளர் / மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தணிகாசலம், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அண்ணாதுரை, தேர்தல் வட்டாட்சியர் திருமலை, உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்

# சோழபுரம் அருகே விவசாய நிலத்தில் 4 உலோக சிலைகள் கண்டெடுப்பு

கும்பகோணம்:மே.01-



சோழபுரம் அருகே அலேக்சாண்டர் என்பவரது நிலத்தில் 4 உலோக சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. மீட்கப்பட்ட 4 உலோக சிலைகளும் திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன

# 4 பேர் உயிரிழந்த நிலையில் நவி மும்பையில் தர்பூசணி விலை கடும் வீழ்ச்சி

மும்பை:மே. 01-

தெற்கு மும்பையைச் சேர்ந்த அப்துல்லா டோகாடியா (40), அவரது மனைவி நஸ்ரின் (35), மகள்கள் ஆயிஷா (16) மற்றும் ஜைனப் (13) ஆகியோர் கடந்த சனிக்கிழமை இரவு வீட்டில் நடந்த உறவினர்கள் சந்திப்புக்குப் பிறகு தர்பூசணி பழம் சாப்பிட்டனர். அதன் பிறகு அனைவருக்கும் கடுமையான வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. சிகிச்சை பலனின்றி சில மணி நேரங்களிலேயே 4 பேரும் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களின் பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு வெளியான பூர்வாங்க அறிக்கையில், உணவு நச்சு காரணமாக அவர்களின் மரணம் நிகழ்ந்திருக்கலாம் என கூறப்பட்டுள்ளது.இந்த சூழ்நிலையில், கோடை காலத்தில் தர்பூசணி அதிக அளவில் விற்பனையாகும் பழமாக இருந்தபோதிலும், ஆசியாவின் மிகப்பெரிய மொத்த விவசாய சந்தைகளில் ஒன்றான நவி மும்பை வேளாண் உற்பத்தி சந்தையில் (ஏபிஎம்சி) தற்போது அதன் தேவை திடீரென சரிந்துள்ளது.ஒரு கிலோ தர்பூசணி ரூ.5 முதல் ரூ.7 வரை மட்டுமே விற்கப்படுவதால், விவசாயிகள் பெரும் நஷ்டத்தைச் சந்திப்பதாகத் தெரிவிக்கின்றனர். பொதுவாக, இதன் மொத்த விற்பனை விலை ரூ.10 முதல் ரூ.35 ஆகவும், சில்லறை விற்பனை விலை ரூ.30 முதல் ரூ.100 வரையிலும் இருக்கும்.ஆனால், தர்பூசணி சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்ததால் அதை வாங்குவதை பொதுமக்கள் தவிர்ப்பதாகக் கூறப்படுகிறது.

# தில்லை குழுமத்தின் நிறுவனத் தலைவரும், சிறந்த தொழிலதிபருமான மறைந்த டாக்டர் எஸ்.தேவராஜ் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி




தாம்பரம், மே. 01-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் அதிமுக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட இளைஞர் அணி இணை செயலாளரான தாம்பரம் டி.தில்லைராஜ், கார்த்திக் ராஜ், நடராஜ் தேவ் அவர்களின் தந்தையும், தில்லை குழுமத்தின் நிறுவனத் தலைவரும், சிறந்த தொழிலதிபருமான மறைந்த டாக்டர் எஸ்.தேவராஜ் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு தாம்பரம் சண்முகம் சாலையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் டி.கே.எம். சின்னையா பிரதான விருந்தினராக கலந்து கொண்டு, டாக்டர் எஸ்.தேவராஜ் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து, அவரது சேவைகளை நினைவுகூர்ந்து சில நிமிடங்கள் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.பின்னர், பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் 2000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு உணவு பெற்றனர். இந்த உணவு வழங்கும் நிகழ்வை செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னய்யா தொடங்கி வைத்தார்.

மேலும், நிகழ்வில் கலந்து கொண்ட சமூகப் பிரமுகர்கள் மற்றும் உறவினர்கள், மறைந்த டாக்டர் எஸ்.தேவராஜ் அவர்கள் சமூக சேவைகளில் ஆற்றிய பங்களிப்புகள், மனிதநேய பணிகள் மற்றும் தொழில்துறையில் பெற்றிருந்த சாதனைகள் குறித்து நினைவுகூர்ந்து பேசினர். அவரது சேவைகள் என்றும் மக்களின் நினைவில் நிலைத்து நிற்கும் என அவர்கள் தெரிவித்தனர்.இந்த நிகழ்வில் மாவட்ட பொருளாளர் பி.கே.பரசுராமன், பகுதி செயலாளர்கள் எல்லார் செழியன், கோபிநாதன் மற்றும் உள்ளூர் நிர்வாகிகள், இளைஞர் அணி உறுப்பினர்கள், தில்லை குழுமம் நிர்வாகிகள், குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## திருப்பத்தூர் தொகுதியில் 6 கிராமங்களில் மறு வாக்குப் பதிவு கோரிய வழக்கு தள்ளுபடி



புதுக்கோட்டை,மே.01-
சிவகங்கை திருப்பத்தூர் தொகுதிக்கு உட்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 கிராமங்களில் மீண்டும் வாக்குப்பதிவு நடத்த கோரிய வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆர்.பாலகுறிச்சி, ஆர்.சீகம்பட்டி, ரெகுநாதபட்டி, வைரன்பட்டி, கோபால்பட்டி உள்ளிட்ட ஆறு கிராமங்கள், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் 23ஆம் தேதி நடந்த தேர்தலில், இந்த கிராம மக்கள் யாரும் வாக்களிக்கவில்லை. இதனால், இந்த கிராமங்களில் மறு வாக்குப் பதிவு நடத்தக் கோரி, பாலகுறிச்சியை சேர்ந்த பாஜக பிரமுகர் லட்சுமணன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், திருப்பத்தூர் தொகுதியில் தங்கள் கிராமத்தை சேர்த்துள்ளதால், நிர்வாக உதவிகள் கிடைப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், ஆறு கிராமங்களை புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதியில் சேர்க்க கோரி, பல ஆண்டுகளாக மனுக்கள் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த தேர்தலில் 6 கிராமங்களைச் சேர்ந்த 2,012 வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை என்பதால், இந்த ஆறு கிராமங்களுக்கும் மீண்டும் புதிதாக வாக்குப் பதிவு நடத்த வேண்டும் என மனுவில் கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, தேர்தலின் போது இந்த ஆறு கிராம மக்களை வாக்களிக்க விடாமல் யாரும் தடுக்கவில்லை. தேர்தல் முடிந்த பிறகு எப்படி வாக்களிக்க அனுமதிக்க முடியும் என கேள்வி எழுப்பி, இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல எனக் கூறி, தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். திருப்பத்தூர் தொகுதியில் அமைச்சர் பெரிய கருப்பன் திமுக சார்பில் போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சாத்தான்குளம் வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 9 பேரும் ஜூன் 1க்குள் மேல்முறையீடு செய்யலாம்: ஐகோர்ட்



மதுரை,மே.01-
சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட போலீஸார் 9 பேரும் ஜூன் 1க்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சாத்தான்குளம் ஜெயராஜ், அவர் மகன் பென்னிக்ஸ் ஆகியோர் கடந்த 2020ல் கரோனா ஊரடங்கு அமலில் இருந்த போது சாத்தான்குளம் போலீஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர். இது தொடர்பாக கொலை வழக்கு பதிவு செய்து அப்போதைய காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், மேலும், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், தலைமை காவலர் முருகன், காவலர்கள் சாமதுரை, முத்துராஜா, செல்லதுரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகியோரை சிபிஐ கைது செய்தது.

இந்த வழக்கை மதுரை மாவட்ட நீதிமன்றம் விசாரித்து ஸ்ரீதர் உட்பட 9 பேருக்கும் தூக்கு தண்டனை விதித்தது. தூக்கு தண்டனையை உறுதிப்படுத்தக்கோரி தமிழக அரசு மற்றும் சிபிஐ தரப்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுக்கள் நீதிபதிகள் ஆனந்த் வெங்கடேஷ், ராமகிருஷ்ணன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. ஸ்ரீதர் உட்பட 9 பேரும் சிறையில் இருந்தபடி காணொலி வாயிலாக நீதிமன்றத்தில் ஆஜராகினர். அப்போது நீதிபதிகள், 9 பேரிடமும் வழக்கறிஞர்கள் நியமனம் செய்துள்ளீர்களா? எனக் கேட்டார். அதற்கு, அடுத்த விசாரணைக்குள் வழக்கறிஞர் நியமித்துவிடுவோம் என பதிலளித்தனர். இதையடுத்து சிபிஐ மேல்முறையீடு மனுவின் நகலை குற்றவாளிகளுக்கு வழங்க பதிவாளருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். முதல் குற்றவாளியான ஸ்ரீதர், மேல்முறையீட்டு மனுவை தயார் செய்ய 15 நாள் விடுப்பு வழங்குமாறு கோரிக்கை வைத்தார். அதை ஏற்க மறுத்த நீதிபதிகள், மேல்முறையீட்டு மனு தயாரிக்க சிறைத்துறை போதிய வசதிகளை செய்து தரும்.சிறையில் அனைத்து வசதிகளும் உள்ளது. எனவே விடுமுறை தேவையில்லை என்றனர்.தொடர்ந்து நீதிபதிகள், இந்த வழக்கு தமிழகம் முழுவதும் உற்றுநோக்கப்படும் வழக்காகும். எனவே, ஜூன் 1க்குள் மேல்முறையீடு மனுக்களை தாக்கல் செய்யுங்கள். ஜூன் 4 முதல் தினமும் விசாரணை நடத்தப்பட்டு தீர்ப்பளிக்கப்படும். விசாரணை ஜூன் 4க்கு ஒத்திவைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

## தமிழர் உயர்வுக்கு வழிகாட்டியவர் பாரதிதாசன்: 136வது பிறந்தநாளில் முதல்வர், தலைவர்கள் புகழாரம்



சென்னை: மே.01-
தமிழின் இனிமையையும், தமிழரின் உயர்வுக்கான வழியையும் தன் கவிதையால் காட்டியவர் கவிஞர் பாரதிதாசன் என்று அவரது 136வது பிறந்த நாளையொட்டி முதல்வர் மற்றும் அரசியல் தலைவர்கள் புகழாரம் சூட்டியுள்ளனர்.பாவேந்தர் பாரதிதாசன் 136வது பிறந்த நாள் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி, சென்னை மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் உள்ள அவரது சிலைக்கு தமிழக அரசு சார்பில் தமிழ் வளர்ச்சித் துறை செயலர் வே.ராஜாராமன் உள்ளிட்ட அதிகாரிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.அரசியல் கட்சித் தலைவர்கள் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

முதல்வர் ஸ்டாலின்: தமிழின் இனிமையையும், தமிழரின் உயர்வுக்கான வழியையும் தன்கவிதையால் காட்டியவர் கவிஞர் பாரதிதாசன். பாவேந்தரின் திண்மை நிறை தமிழ், ஒளியென நம் இனத்துக்கு துணை நிற்கட்டும். தமிழ் எனும் ஆயுதமேந்தி இன மானம் உரைத்த பாவேந்தர் புகழ் வாழியவே.துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்: தமிழர்களின் சுயமரியாதை உணர்வை, தமது தீப்பொறி வரிகளால் தட்டி எழுப்பிய கவிஞர் பாரதிதாசனின் பிறந்தநாள்.

இனப் பகைவர்களின் சூழ்ச்சிகளை கூரிய வரிகளால் தோலுரித்து, தமிழ் இனத்தை எழுச்சி கொள்ளச் செய்த பாவேந்தரின் பாடல்கள் ஆதிக்கத்துக்கு எதிரான திராவிட இயக்கத்தின் போர்க்குரல்.காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை: இளைஞர்களுக்கு விழிப்புணர்வை அளிக்கும் தீபமாகவும், சமூக மாற்றத்துக்கு ஊக்கமளிக்கும் சக்தியாகவும் தமிழின் பெருமையை உலகம் முழுவதும் பரப்பிய ஒளியாக பாரதிதாசன் என்றும் நிலைத்திருப்பார். அவரது சிந்தனைகளை நினைவுகூர்வதுடன், அவற்றை நம் வாழ்க்கையிலும் நடைமுறைப்படுத்துவோம். அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன்: பாடல்களால் மக்களிடம் தமிழ் உணர்வை ஊட்டி, தமிழின் தொன்மை, பெருமையை உலக அரங்கில் உயர்த்திப் பிடித்தவர் கவிஞர் பாரதிதாசன்.எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என உரக்க முழங்கி தமிழ் ஆசிரியர், கவிஞர், எழுத்தாளர் என பல வழிகளிலும் தமிழ் மொழியின் இனிமையை எடுத்துரைத்த பாரதிதாசனின் தமிழ்ப் பணியை எந்நாளும் போற்றி வணங்குவோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.



## நிர்வாக ஒதுக்கீட்டில் சேர்ந்த சட்டக்கல்லூரி மாணவர்கள் தேர்வு எழுத அனுமதி

மதுரை: மே.01-
சட்டக் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டில் சேர்ந்த மாணவர்கள் தேர்வு எழுத உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பாளையங்கோட்டை ஆரியகுளம் பகுதியைச் சேர்ந்த ஷைனி, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: கீழவல்லநாட்டில் மகளிர் சட்டக் கல்லூரி உள்ளது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கல்லூரியில் அரசு ஒதுக்கீடு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டில் தலா 60 மாணவர்களை சேர்க்க பல்கலைக்கழகம் அனுமதி வழங்கியுள்ளதாக கல்லூரி நிர்வாகம் தெரிவித்தது.

நான் 202526 ஆண்டில் நிர்வாக ஒதுக்கீட்டு இடத்தில் சேர்ந்தேன். தேர்வுக்கு தயாராகி வந்த நிலையில், 60 மாணவர்களுக்கு மட்டும் தேர்வு எழுத அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நான் உட்பட மீதமுள்ள மாணவர்கள் தேர்வு எழுத அனுமதி கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கல்லூரி நிர்வாக ஒதுக்கீட்டில் என்னைப் போல் பல்வேறு மாணவர்கள் சேர்ந்துள்ளனர். தற்போது தேர்வு நெருங்கும் நிலையில் எங்களுக்கு தேர்வு எழுதவும் தேர்வுக் கட்டணம் செலுத்தவும் அனுமதிக்கவில்லை.

இதனால் எங்களின் கல்வி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே 2025ஆ-2026 கல்வியாண்டுக்கான சட்டக்கல்வித் தேர்வில் பங்கேற்க அனுமதிக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறப்பட்டிருந்தது.

இதே கோரிக்கையை வலியுறுத்தி பல்வேறு சட்டக் கல்லூரிகளின் மாணவிகளும் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுக்களை நீதிபதி மும்மினேனி சுதீர்குமார் விசாரித்தார்.

பின்னர் நீதிபதி, மாணவ மாணவியர்கள் பல்கலைக்கழக தேர்வு எழுத அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அனுமதிக்க வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை முடித்து வைத்தார்.



## தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குழந்தையை காப்பாற்றிய அரசு மருத்துவர்கள்

சென்னை: மே.01-
தீ விபத்தால் பாதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தையை சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மருத்துவர்கள் காப்பாற்றினர்.இதுதொடர்பாக, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை டீன் சாந்தாராமன், மருத்துவக் கண்காணிப்பாளர் பாஸ்கர், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மதிவாணன் ஆகியோர் கூறியதாவது: சென்னை புரசைவாக்கத்தில் உள்ள அரசு மகப்பேறு மருத்துவமனையில் கடந்த மாதம் தனலட்சுமி என்ற பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்தது.மருத்துவமனையில் இருந்த ஒரு உபகரணத்தில் மின்கசிவால் ஏற்பட்ட தீ விபத்தால், குழந்தையின் உடலில் 23 சதவீதம் தீக்காயம் ஏற்பட்டது.இதையடுத்து, குழந்தை மேல்சிகிச்சைக்காக சென்னை எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது.அப்போது, குழந்தையின் உடலில் சூடு குறைந்து போயிருந்தது. நாடி மெலிதாக துடித்துக் கொண்டிருந்தது.துரிதமாக செயல்பட்ட மருத்துவக் குழுவினர், உடனே குழந்தையின் உடலில் ஏற்பட்டிருந்த காயத்தை சுத்தப்படுத்தி, திசு சிகிச்சையும் மேற்கொண்டனர்.இதன் பிறகு, 4 நாட்களுக்கு தீவிர சிகிச்சை பிரிவில் செயற்கை சுவாசத்தில் குழந்தை வைக்கப்பட்டது. தீக்காயத்தில் கிருமித் தொற்று இருந்ததால் ஆன்டிபயாடிக் மருந்துகள் தொடர்ந்து 14 நாட்கள் செலுத்தப்பட்டன.இதற்கிடையே, 3ம் நாளில் குழாய் மூலம் குழந்தைக்கு தாய்ப்பாலும் கொடுக்கப்பட்டது. பின்னர், படிப்படியாக பாலாடை வழியாகவும், நேரடியாகவும் தாய்ப்பால் கொடுக்கப்பட்டது. தினமும் காயத்தை சுத்தப்படுத்தி தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டது.24 நாட்களில் குழந்தை முழுமையாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளது. குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய மருத்துவர்களுக்கு பெற்றோர் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## காவல் நிலையம் 100% பாதுகாப்புடன் உள்ளது என்பதை தஞ்சை மாவட்ட எஸ்.பி . உறுதி செய்ய வேண்டும்

### ஐகோர்ட் கிளை உத்தரவு



மதுரைமே.01-
அதிராம்பட்டினம் காவல் நிலையத்தை இடித்து அப்புறப்படுத்தக் கோரி ஐகோர்ட் மதுரைக்கிளை வழக்கு தொடரப்பட்டுள்ளது. காவலர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக உள்ளதால் காவல் நிலையம் கட்டிடத்தை இடித்து தள்ள வேண்டும் என்று மனுதாரர் கோரிக்கை விடுத்துள்ளார். இதனையடுத்து காவல் நிலையம் 100% பாதுகாப்புடன் உள்ளது என்பதை தஞ்சை மாவட்ட எஸ்.பி . உறுதி செய்ய வேண்டும் என ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது

## கிருஷ்ணகிரி வழக்கறிஞர் சங்கத் தேர்தல்: கோவிந்தராஜுலு தொடர்ந்து 5வது முறையாக தலைவர்



கிருஷ்ணகிரி, மே.01-
கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற மாவட்ட வழக்கறிஞர் சங்கத் தேர்தலில், வழக்கறிஞர் கோவிந்தராஜுலு தொடர்ந்து ஐந்தாவது முறையாக தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த தேர்தலில் முருகன், திருமதி சரிதா ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், கோகுல் கிருஷ்ணன் செயலாளராகவும், தினேஷ் குமார் மற்றும் திருமதி அழகுநிலா இணைச் செயலாளர்களாகவும், சீனிவாசன் நூலகராகவும் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தலைவர் கோவிந்தராஜுலு, சங்கத்தின் வளர்ச்சிக்கு தனிகவனம் செலுத்தப்படும் என்றும், மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் கூடுதலாக 3 ஜெ.எம். நீதிமன்றங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும், வழக்கறிஞர் சொசைட்டி அமைப்பு, புதிய ஏ.டி.எம் வசதி, இளம் வழக்கறிஞர்களுக்கு அறிமுக விழா போன்ற திட்டங்களும் முன்னெடுக்கப்படும் என்றார்.அதோடு, 25 ஆண்டுகள் பணி செய்த மூத்த வழக்கறிஞர்களுக்கு பாராட்டு விழா நடத்தப்படும் என்றும், புதிய அரசு அமைந்ததும் இளம் வழக்கறிஞர்களுக்கான பயிற்சிக்காக 100 அறைகள் கொண்ட கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார். இந்த நிகழ்வில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் மற்றும் வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

## கும்பகோணம் சாரங்கபாணி மற்றும் சுந்தரேஸ்வரர் கோயிலில் சித்திரை பெருவிழா தேரோட்டம் கோலாகலம்



கும்பகோணம்,மே.01-
கும்பகோணம் சாரங்கபாணி கோயில் மற்றும் சுந்தரேஸ்வரர் கோயிலில் சித்திரை பெருவிழாவையொட்டி திருத்தேரோட்டம் ஏப்.30ம் தேதி நடைபெற்றது.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட 108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றான இந்தக் கோயிலில் ஆண்டுதோறும் இந்த விழா விமரிசையாக நடைபெறுவது வழக்கம். தமிழகத்திலேயே 3வது பெரிய தேராக, உயரமான தேராக கருதப்படும் இந்த தேரின் தேரோட்டம் இன்று நடைபெற்றது. நிகழாண்டு கொடியேற்றம் கடந்த ஏப்.22ம் தேதி நடைபெற்றது. ஏப். 23ம் தேதி முதல் வரும் அடுத்த மாதம் மே 9ம் தேதி வரை பெருமாள் தாயார் பல்வேறு வாகனங்களில் புறப்பாடு நடைபெறுகிறது.

பிரதான விழாவான ஏப்.30ம் தேதி அதிகாலை 5.15 மணிக்கு மேல் 6.15 மணிக்குள் பெருமாள் தாயாருடன் திருத்தேரில் எழுந்தருளலும், காலை 8.45 மணிக்கு மேல் 9.15 மணிக்குள் திருத்தேரோட்டம் நடைபெற்றது..தேரில் உபயநாச்சியார்கள் உடனாய சாரங்கபாணி சுவாமி சிறப்பலங்காரத்தில் காட்சியளித்தனர். ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாரங்கா சாரங்கா என முழக்கமிட்டபடி தேரின் வடம் பிடித்து இழுத்துச் சென்றனர். தொடர்ந்து இரவு 7 மணிக்கு தீர்த்தவாரி நடைபெற்றது. வரும் மே 9ம் தேதி ஸப்தாவர்ணம், காலை 11 மணிக்கு 81 கலச ஸ்நபன திருமஞ்சனம், 19ம் தேதி இரவு 8 மணிக்கு நூதன அன்னபட்சி கண்ணாடி பல்லக்கில் சாரங்கபாணி,சக்கரபாணி, சக்கரவர்த்தி திருமகன் ஆகிய 3 புறப்பாடு வீதியுலா நடைபெறுகிறது. இதே போல் கும்பகோணம் வட்டம், கொரநாட்டுக்கருப்பூரில் உள்ள அபிராமி அம்பிகா உடனாய சுந்தரேஸ்வரர் கோயிலில் சித்ரா பவுர்ணமி விழா கொடியேற்றத்துடன் ஏப்.23ம் தேதி தொடங்கி வரும் மே 3ம் தேதி வரை நடைபெறுகிறது. பெட்டி காளியம்மன் கோயில் என்ற சிறப்பு பெற்ற இக்கோயிலில் ஆண்டு தோறும் இந்த விழா விமரிசையாக நடைபெறுவது வழக்கம். நிகழாண்டு கொடியேற்றம் கடந்த ஏப்.22ம் தேதி நடைபெற்றது.

தொடர்ந்து ஏப்.23ம் தேதி முதல் மே 3ம் தேதி வரை சுவாமிகள் பல்வேறு வாகனங்களில் வீதியுலா நடைபெறுகிறது, பிரதான விழாவான தேரோட்டம் ஏப்.30ம் தேதி காலை 5 மணிக்கு சுவாமிகள் திருத்தேரில் எழுந்தருளல், காலை 8 மணிக்கு திருத்தேரோட்டம் நடைபெற்றது, தேரில் அபிராமி அம்பிகா உடனாய சுந்தரேஸ்வரர் சிறப்பலங்காரத்தில் காட்சியளித்தனர்.மே 1ம் தேதி காலை 9.15 மணிக்கு மேல் 10.15 மணிக்குள் சித்ரா பவுர்ணமி தீர்த்தவாரி, மே 3ம் தேதி விடையாற்றி, சண்டிகேஸ்வரர் உள் வீதியுலா நடைபெறுகிறது. ஏற்பாடுகளை அந்தந்த கோயில் அதிகாரிகள் மற்றும் கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

## வழக்கறிஞருக்கு கொலை மிரட்டல்: மின்வாரிய ஆய்வாளர் உட்பட 4 பேர் மீது வழக்கு பதிவு

சிவகங்கை மே.01-

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக மின்வாரிய ஆய்வாளர் உட்பட நான்கு பேர் மீது மதகுபட்டி காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.சிவகங்கை மாவட்டம் மதகுபட்டி காவல் எல்லைக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்தவர் காளிதாஸ் (33). சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வரும் இவர், கடந்த ஜனவரி 2ஆம் தேதி சென்னையிலிருந்து சொந்த ஊருக்கு வந்தபோது, சிறுசெங்குளிப்பட்டி சென்னை சாலையில் சென்றுகொண்டிருந்தபோது அர்சுணன் என்பவரது அலைபேசி மூலமும், நேரடியாகவும் சிலர் தகராறில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.இதுகுறித்து காளிதாஸ் அளித்த புகாரில், எதிர்தரப்பினர் தன்னை அவதூறாக திட்டியதுடன் கொலை மிரட்டலும் விடுத்ததாகவும், அதற்கான ஆடியோ ஆதாரங்கள் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.இந்த புகாரின் பேரில் சிவகங்கை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 2 உத்தரவின்படி, மதகுபட்டி காவல் நிலைய போலீசார் மின்வாரிய ஆய்வாளர் காளிமுத்து, கண்ணதாசன், காளிமுத்தன், கவிதா ஆகிய 4 பேர் மீது பாரதீய நியாய சன்ஹிதா சட்டப்பிரிவுகள் 296(தீ), 351(2) ஆகியவற்றின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## S.கரிசல்குளம் முத்துமாரியம்மன் ஆலயத்தில் நித்திய அன்னதான திட்டம் தொடக்கம்

மானாமதுரை மே.01-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கேட்டவரம் தரும் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தில், சித்திரை பௌர்ணமியை முன்னிட்டு நித்திய அன்னதானம் திட்ட தொடக்க விழா இன்று (மே 1) நடைபெற உள்ளது.



இந்நிகழ்ச்சி மதியம் 1 மணி முதல் 2 மணி வரை, S.கரிசல்குளம் முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெறுகிறது. நாள்தோறும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் இந்த அறப்பணி, "அன்னதானம் அனைத்துத் தானங்களிலும் சிறந்தது" என்ற நோக்கில் தொடங்கப்படுகிறது.இந்த நித்திய அன்னதானத்திற்கு பணமாகவோ அல்லது பொருட்களாகவோ நன்கொடை வழங்க விரும்பும் பக்தர்கள் sri-muthumari@indianbk என்ற UPI ஐடி மூலம் பங்களிக்கலாம். மேலும் விவரங்களுக்கு 94420 00451 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

இந்த தொடக்க விழாவில் பக்தர்கள் திரளாக கலந்துகொண்டு அம்மனின் அருளையும் அன்னதானப் பிரசாதத்தையும் பெற்றுச் செல்லுமாறு ஆலய நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.




## மானாமதுரையில் 18வது நாளாக மோர் வழங்கும் பசுமை செயல் குழு

மானாமதுரை மே.01-

கோடை வெயில் தீவிரமடைந்து வரும் நிலையில், மானாமதுரையில் பொதுமக்களின் தாகம் தணிக்க பசுமை செயல் குழு சார்பில் தொடர்ந்து 18வது நாளாக மோர் வழங்கும் மனிதநேய சேவை நடைபெற்றது. அருள்மிகு ஆனந்தவல்லி அம்மன் கோயில் அருகே நடைபெற்ற இந்த முகாமில்,



ஆட்டோ ஓட்டுநர்கள், பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டிகள் மோர் பருகி பயனடைந்தனர். பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த சேவைக்கு மானாமதுரை மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. பசுமை செயல் குழுவினரின் இந்த மனிதநேய பணி பாராட்டுக்குரியது என பொதுமக்கள் தெரிவித்தனர்.

## கூவாகம் கூத்தாண்டவர் கோயிலில் பெருந்தேரோட்டம் அரவான் களப்பலி காண திருநங்கைகள் வழிபாடு

விழுப்புரம்:மே.01-

கூவாகம் கூத்தாண்டவர் கோயில் சித்திரை திருவிழா தேரோட்டம் நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது. அரவான் களப்பலி கொடுக்கப்பட்டதும், தாலியை அறுத்து விதவை கோலத்தில் திருநங்கைகள் ஒப்பாரி வைத்து அழுதனர்.

உளுந்தூர்பேட்டை அடுத்த கூவாகம் கிராமத்தில் உள்ள கூத்தாண்டவர் கோயிலில், சித்திரை திருவிழா நடைபெறுகிறது. விழாவின் முக்கிய நிகழ்வாக அரவானின் திருக்கண் திறத்தல் மற்றும் திருநங்கைகள் மாங்கல்யம் ஏற்றுக் கொள்ளும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.இதைத்தொடர்ந்து கோயிலில் உள்ள அரவான் சிரசுக்கு நேற்று அதிகாலை, மாலை அணிவித்து, ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு, கோயிலின் வடக்கே நிலைநிறுத்தப்பட்டிருந்த சகடையில் சுமார் 30 அடி உயரகம்பம் நட்டு, வைக்கோல் சுற்றப்பட்டது.

பின்னர், 3 கிராமங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புஜங்கள், மார்பு பதக்கம், அரசிலை, பாதம், கைகள், கயிறு, கடையாணி உள்ளிட்டவற்றை கொண்டு அரவானின் உருவம் அமைக்கப்பட்டது.இதையடுத்து தேரோட்டம் தொடங்கியது திருநங்கைகள், பக்தர்கள் திருத்தேரை வடம்பிடித்து இழுத்தனர் கோயிலை சுற்றி 4 மாட வீதிகளில் வலம் வந்து நிலையை வந்தடைந்தது.பின்னர் நத்தம் கிராமம் பந்தலடி எனப்படும் அழிகளத்துக்கு திருத்தேர் சென்றது. அங்கு அரவான் களப்பலி கொடுக்கும் நிகழ்வு நடைபெற்றது.இதையடுத்து திருநங்கைகள் தாலியை அறுத்து, வெள்ளை சேலையை உடுத்தி ஒப்பாரி வைத்தனர்.பின்னர், அரவான் உயிர்ப்பிக்கும் நிகழ்வு நடைபெற்றது. அதன்பிறகு, சிரசு சிறப்பு அலங்காரத்துடன் கோயில் கொண்டு வரப்பட்டது. தருமர் பட்டாபிஷேகத்துடன் விழா நாளை நிறைவுபெறுகிறது.

## தேனி மாவட்டம்தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026வாக்கு எண்ணும் பணிகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுலவர் / மாவட்டஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத்சிங் தலைமையில் நடைபெற்றது.

தேனி மே.01-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில், தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026 ஐ முன்னிட்டு 4 சட்டமன்றத் தொகுதிகளில் பதிவான வாக்குகளை எண்ணும் பணிகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்டதேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு 23.04.2026 அன்று ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199.பெரியகுளம், 200.போடிநாயக்கனூர், 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையமாக கொடுவிலார்பட்டியில் உள்ள தேனி கம்மவார் சங்கம் பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டு, வருகின்ற 04.05.2026 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கையின்



மேஜையில் ஒரு மேற்பார்வையாளர், ஒரு உதவியாளர் மற்றும் ஒரு நுண் பார்வையாளரும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அதேபோன்று, தபால் வாக்கு சீட்டு எண்ணிக்கை காலை 8 மணிக்கு துவங்கிய அரை மணி நேரம் கழித்து 8.30 மணிக்கு மின்னணு வாக்கு இயந்திரத்தின் பதிவு வாக்கு எண்ணிக்கை துவங்கப்படும். மின்னணு வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறை, வாக்கு எண்ணும் நாள் அன்று காலை, வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு, அங்கிருந்து வாக்கு எண்ணப்படும் மேஜைக்கு கொண்டு வரப்படும். வாக்கு எண்ணும் அலுவலர்கள் வாக்கு எண்ணிக்கை ஆரம்பம் முதல் இறுதி வரை தமக்கு ஒதுக்கப்பட்ட மேஜையை தவிர்த்து வேறு எங்கும் செல்லக் கூடாது. ஒவ்வொரு சுற்று வாக்குகளும் வேட்பாளரின் முகவர்களுக்கு வாக்குப்பதிவுகளை நன்றாக தெரியும் வகையில் காண்பிக்க வேண்டும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவாகியுள்ள வாக்குகளை எண்ணும் பணிக்கு 68 மேற்பார்வையாளர்கள், 68 உதவியாளர்கள் மற்றும் 68 நுண்பார்வையாளர்கள் என 204 நபர்களும் , தபால் வாக்குகளை எண்ணும் பணிக்கு 24 மேற்பார்வையாளர்கள், 48 உதவியாளர்கள் மற்றும் 24 நுண்பார்வையாளர்கள் என 96 நபர்களும் என மொத்தம் 300 நபர்கள் வாக்கும் எண்ணும் பணியில் ஈடுபட உள்ளார்கள்.

வாக்கு எண்ணிக்கையின் போது ஏதேனும் ஐயம் எழும்பட்சத்தில் அதனை உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் உடனடியாக தெரிவித்திட வேண்டும். வாக்கு எண்ணிக்கையின் போது இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை முறையாக பின்பற்றி , வாக்கு எண்ணிக்கையினை நேர்மையாகவும் நியாயமாகவும் நடத்திட வேண்டும் போன்ற பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டது. இப்பணிகள் அனைத்தையும் அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து சிறப்பான முறையில் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். இப்பயிற்சி வகுப்பில், தேர்தல் நடத்தும் அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன், தேர்தல் நடத்தும் அலுவலர் / தனித்துணை ஆட்சியர் கவிதா, தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வழங்கல் அலுவலர் .நல்லையா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்). காசி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், வட்டாட்சியர் (தேர்தல்) சுருளி, வட்டாட்சியர் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## 90 வயது மூதாட்டியின் அவதூறு வழக்கில் 20 ஆண்டுக்கு பிறகு விசாரணையா? மறுநாளில் உத்தரவை மாற்றிய ஐகோர்ட்

மும்பை:மே.01-

மூதாட்டி தாக்கல் செய்த அவதூறு வழக்கை 20 ஆண்டுகள் கழித்து விசாரிக்கப்படும் என்ற உத்தரவை மறுநாளில் மாற்றி மும்பை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.மும்பையைச் சேர்ந்த தாரிணிபென் (90), த்வனி தேசாய் (57) ஆகியோர் கடந்த 2017ம் ஆண்டு கில்கில்ராஜ் பன்சாலி மற்றும் சிலருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தனர். 2015ம் ஆண்டு ஷியாம் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் வருடாந்திர பொதுக்குழுக் கூட்டத்தின்போது நடந்ததாகக் கூறப்படும் சில சம்பவங்கள் தொடர்பாக இந்த வழக்கு தொடரப்பட்டது.



இந்தச் சம்பவங்கள் தங்களுக்கு மன உளைச்சலையும் துன்பத்தையும் ஏற்படுத்தியதாகக் கூறியுள்ள மனு தாரர்கள், தங்களுக்கு ரூ.20 கோடி இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும் என அம்மனுவில் கோரி உள்ளனர்.

இந்த மனு நீதிபதி ஜிதேந்திர ஜெயின் தலைமையிலான தனி நீதிபதி அமர்வு முன்பு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி ஜிதேந்திர ஜெயின் கூறியதாவது: தங்கள் வாழ்வின் இறுதிக்கட்டத்தில் இருக்கும் வழக்குதாரர்களுக்கு இடையிலான இந்த சட்டப் போராட்டம் ஒரு 'ஈகோ யுத்தம்'. நீதித்துறை அமைப்பை முடக்கும் ஏராளமான வழக்குகளில் இதுவும் ஒன்று.இதன் விளைவாக, உண்மையிலேயே முன்னுரிமை தேவைப்படும் விஷயங்களை நீதிமன்றத்தால் கையில் எடுக்க முடியாமல் போகிறது. இந்த விவகாரத்தை ஒரு மன்னிப்பு மூலம் சுமூகமாகத் தீர்த்துக் கொள்ளுமாறு நீதிமன்றம் ஏற்கெனவே அறிவுறுத்தியிருந்தது. ஆனால், 90 வயதான மனுதாரர் இந்த அவதூறு வழக்கை நடத்துவதில் பிடிவாதமாக இருக்கிறார்.

மனுதாரர் ஒரு 'மிக மூத்த குடிமகள்' என்ற காரணத்துக்காக மட்டுமே இந்த வழக்குக்கு முன்னுரிமை அளிக்க முடியாது. இதைப் பற்றி நான் இதற்கு மேல் எதுவும் சொல்ல விரும்பவில்லை. இந்த வழக்கு அடுத்த 20 ஆண்டுகளுக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. இதனை 2046க்கு பிந்தைய தேதியில் பட்டியலிடுங்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்நிலையில் இந்த வழக்கு வரும் ஜூலை 15ம் தேதி விசாரிக்கப்படும் என நேற்று நீதிபதி அறிவித்தார்.

## இனப்பெருக்க அதிகரிப்பால் 80 நீர்யானைகளை கொல்ல கொலம்பியா முடிவு

பொகாட்டா:மே.01-

கொலம்பியா அரசு 80 நீர்யானைகளைக் கொல்ல முடிவு செய்துள்ளது. இவற்றை தடுத்து தன்னிடம் ஒப்படைக்க தொழிலதிபர் ஆனந்த் அம்பானி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கொலம்பியாவின் கோகைன் போதைப் பொருள் கடத்தல் மன்னனாக திகழ்ந்தவர் பாப்லோ எஸ்கோபார். இவருக்கு லத்தீன் அமெரிக்காவில் மிகப் பெரிய தனியார் உயிரியல் பூங்கா அமைக்க வேண்டும் என்பது ஆசை. இதற்காக கடந்த 1980ம் ஆண்டுகளில் 3 பெண் நீர்யானைகள் மற்றும் ஒரு ஆண் நீர்யானை கொலம்பியாவுக்கு இறக்குமதி செய்தார். அவற்றை புயெர்டோ ட்ரியூன்ஃபோ பகுதியில் உள்ள தனது பண்ணையில் வளர்த்தார்.

தற்போது இவற்றின் இனப்பெருக்கம் அதிகரித்து 160 ஆக உயர்ந்துள்ளது. இது தற்போது ஹேசிண்டா நாப்போல்ஸ் உயிரியல் பூங்காவாக மாற்றப்பட்டு சுற்றுலா தலமாக பயன்படுத்தப்படுகிறது. நீர்யானைகளின் இனப்பெருக்கம் உள்ளூர் உயிரினங்களுக்கும், சுற்றுச் சூழலுக்கும் அச்சுறுத்தலாக மாறியுள்ளன. இதனால், இவற்றில் 80 நீர்யானைகளைக் கொல்ல கொலம்பியா அரசு திட்டமிட்டது.

இல்லையென்றால், 2030ம் ஆண்டுக்குள் நீர்யானைகள் எண்ணிக்கை 500ஆக உயர்ந்துவிடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 80 நீர்யானைகளைக் கொல்லும் முடிவு உலகம் முழுவதும் உள்ள விலங்கு நல ஆர்வலர்களை வேதனையடைச் செய்தது.

இது பற்றி தகவல் அறிந்த இந்திய தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் மகன் ஆனந்த் அம்பானி, 80 நீர்யானைகளையும் கொல்லாமல், குஜராத்தில் உள்ள தனது வனவிலங்கு பூங்காவான 'வன்தாரா' கொண்டு வர அனுமதி அளிக்க வேண்டும் என கொலம்பியா அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இங்கு 1,50,000க்கும் மேற்பட்ட வனவிலங்குகள் இயற்கையான சூழலில் பாதுகாக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது

## டீப்ஃபேக் வீடியோ மூலம் வங்கியில் கடன் பெற்று நூதன மோசடி: குஜராத்தில் 4 பேர் கைது

அகமதாபாத் மே.01-

டீப்ஃபேக் வீடியோ மூலம் வங்கியில் கடன் பெற்று நூதன மோசடி செய்த நான்கு பேரை அகமதாபாத் சைபர் க்ரைம் போலீஸார் கைது செய்துள்ளனர். இந்த சம்பவம் எப்படி கவனம் பெற்று என்பது குறித்து பார்ப்போம்.வழக்கமாக சைபர் மோசடியாளர்கள் ஓடிபி எண்ணை கொண்டு மோசடி செய்வர். அதனால் ஓடிபியை யாரிடமும் பகிர வேண்டாம் என காவல் துறையினர், வங்கிகள் சொல்வதுண்டு. இந்நிலையில், அந்த ஓடிபியை பெற டீப்ஃபேக் வீடியோவை குஜராத்தில் நான்கு பேர் பயன்படுத்தி உள்ளனர்.அகமதாபாத்




நகரைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவருக்கு தனது வங்கியில் இருந்து எந்தவித ஓடிபியும் கடந்த சில நாட்களாக வரவில்லை என்பதை கவனித்துள்ளார். அது தொடர்பாக சந்தேகம் அடைந்த அவர், போலீஸாரை தொடர்பு கொண்டார். தொடர்ந்து போலீஸார் விசாரணையில் ஈடுபட்டு, இது தொடர்பாக நான்கு பேரை கைது செய்துள்ளனர்.இந்த மோசடி எப்படி நடந்தது என்பது குறித்து போலீஸார் விவரித்துள்ளனர். சம்பந்தப்பட்ட தொழிலதிபரின் ஆதார் எண் உடன் லிங்க் செய்யப்பட்ட மொபைல் எண் மாற்றப்பட்டுள்ளது எங்களுக்கு தெரியவந்தது. இதற்காக அவரது பயோமெட்ரிக் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. மாற்றப்பட்ட அந்த மொபைல் எண்ணை கொண்டு, அந்த தொழிலதிபரின் பெயரில் வங்கிக் கணக்கு தொடங்கி, ரூ.25,000 கடன் பெற்றுள்ளனர். மேலும், அவரது டிஜிலாக்கர் கணக்கிலும் முக்கிய தரவுகள் உள்ளதா என்பதை மோசடியாளர்கள் ஆராய்ந்துள்ளனர். இதற்காக ஏஐ டூலை கொண்டு அந்த தொழிலதிபரின் டீப்ஃபேக் வீடியோவை உருவாக்கி உள்ளனர். அதன் மூலம் ஆதார் ஆத்தென்டிகேஷனை சரிபார்த்து, அதில் மொபைல் எண்ணை மாற்றி, ஓடிபி பெற்றுள்ளனர். தொடர்ந்து கேஒய்சி சரிபார்ப்பு மூலம் வங்கியில் கணக்கு தொடங்கி, கடன் பெற்றுள்ளனர். இந்த குற்றம் தொடர்பாக கனுபாய் பர்மர், ஆஷிஷ் வானந்த், முகமது கைஃப் படேல், தீப் குப்தா ஆகிய நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் பொது சேவை மையத்தில் பணி செய்தவர் என போலீஸார் தெரிவித்துள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161